**<u>சாட்சியின் வாக்குமூலம்</u>**

**<u>திருவள்ளூர் மாவட்ட முதன்மை மற்றும் அமர்வு நீதிமன்றம்</u>**

**<u>அசல் வழக்கு எண்</u> : 173/2013**

**<u>வழக்கு சாட்சி</u> : DW1- திருமதி. கலாவதி, த/பெ. பாண்டியன்**

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : | ஜாதி | : |
| தந்தை பெயர் | : | தொழில் | : |
| கிராமம் | : | சமயம் | : |
| வட்டம் | : | வயது | : |

14.06.2023

<u>சாட்சி பிரமாணம் செய்விக்கப்பட்டு வாதித் தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய அனுமதிக்கப்படுகிறார்</u>

**<u>குறுக்கு விசாரணை</u>**

நான் 8ம் வகுப்பு வரை படித்துள்ளேன். தமிழ் எழுத, படிக்க தெரியும். வாதி ஜமுனாவை எனது தாயார் மூலமாக எனக்கு தெரியும். வாதி ஜமுனாவை எனக்கு 15 வருடங்களாக தெரியும். பார்த்து இருக்கிறேன், ஆனால், பேசியது இல்லை. வாதி ஜமுனா எனது பக்கத்து வீட்டில் குடியிருக்கிறார் என்றால் எனக்கு தெரியாது. எனது நிரூபண வாக்குமூலத்தில் சொல்லியுள்ள விவரங்கள் அனைத்தும் எனக்கு தெரியும். மேற்படி விவரங்களை நான் சொல்லித்தான் எனது வழக்கறிஞர் தயார் செய்தார் என்றால் சரிதான். எனது நிரூபண வாக்குமூலத்தில் 7வது பத்தியில் எனக்கும் என் தாயாருக்கும் சொந்தமான இடம் வாதியின் வீட்டிற்கு அருகாமையில் உள்ளது என்று நான் சொல்லியுள்ள விவரம் உண்மையானது தான். என் தாயார் முதலில் ஏலச்சீட்டு நடத்தினார். 2011ல் நான் ஏலச்சீட்டு ஆரம்பித்தேன். வாதியின் கணவர் பெருங்காயம் தயார்

செய்யும் நிறுவனத்தில் வேலை பார்த்தார் என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. வாதியின் கணவருக்கு உடல்நிலை சரியில்லாமல் அவர் பணி ஓய்வு பெற்று அந்த பணி ஓய்வு தொகையை வைத்து குடும்பம் நடத்தி வந்தார் என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. நான் ஏலச்சீட்டு நடத்தியபோது ஏலம் எடுத்தவர்களுக்கு பணம் கொடுக்க முடியாத சூழ்நிலை ஏற்பட்டது என்றால் சரிதான். அந்த சூழ்நிலைகளில் நான் வாதியிடம் அவ்வபோது கடன் பெற்றேன் என்று சொன்னால் சரியல்ல. அவ்வாறு வாதியிடம் 4 முறை கடன் பெற்றேன் என்றாலும் அதற்காக வாதிக்கு கடன் உறுதிச்சீட்டு எழுதிக்கொடுத்தேன் என்று சொன்னாலும் சரியல்ல. மணவாளன் நகரில் வரதன் என்பவரை எனக்கு தெரியாது. என்னிடம் காட்டப்படும் வதசா.ஆ.1 கடன் உறுதி சீட்டில் உள்ள கையெழுத்து என்னுடையது அல்ல. என்னிடம் காட்டப்படும் வதசா.ஆ.2 கடன் உறுதி சீட்டில் உள்ள கையெழுத்து என்னுடையது அல்ல. என்னிடம் காட்டப்படும் வதசா.ஆ.4 ல் கடன் உறுதி சீட்டில் உள்ள கையெழுத்து என்னுடையது அல்ல. என்னிடம் காட்டப்படும் வதசா.ஆ.3 ல் கடன் உறுதி சீட்டில் உள்ள கையெழுத்து என்னுடையது அல்ல. வாதி என் வீட்டிற்கு வந்து என்னை அடித்ததாக நான் காவல் நிலையத்தில் புகார் கொடுத்தேன். அந்த புகாரை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை. வாதியிடம் நான் வாங்கிய கடன் தொகையை திருப்பி கேட்டதால் வாதி மீது நான் புகார் கொடுத்தேன் என்றாலும் அந்த புகாரில் போலீசார் எனக்கு அறிவுரை வழங்கினார் என்றாலும் சரியல்ல. மேற்படி தொகையை இரண்டு மாதத்தில் திருப்பி கொடுத்து விடுவதாக நான் காவல் நிலையத்தில் எழுதிக்கொடுத்தேன் என்று சொன்னால் சரியல்ல. வாதி என்னை அடித்து, மிரட்டியதாக சொன்ன விவரத்திற்கு காவல் நிலையத்தில் புகார் எதுவும் நான் கொடுக்கவில்லை. அவ்வாறு சம்பவம் எதுவும் நடக்கவில்லை என்றாலும் அதன் காரணமாகவே புகார் ஏதும் கொடுக்கவில்லை என்றாலும் சரியல்ல. வாதி எனது வீட்டில் இருந்து ஆவணங்களை எடுத்து சென்றுவிட்டார் என்று சொன்ன விவரத்திற்கு நான் புகார் எதுவும் கொடுக்கவில்லை. நான் வாதி வட்டி தொழில் செய்து வருகிறார் என்று தவறாக கூறியுள்ளேன் என்று சொன்னால் சரியல்ல. நான் வாதியிடம் வாங்கிய கடனுக்காக நானாகவே என் வீட்டு பத்திரத்தை வாதியிடம் கொடுத்தேன் என்று சொன்னால் சரியல்ல. இந்த வழக்கில் எனக்கு எதிராக ஒருதலை பட்ச தீர்ப்பு ஏற்பட்டது என்றால் சரிதான். என் கணவருக்கு உடல்நிலை சரியில்லாததால் என்னால்

ஆஜராக முடியவில்லை. வாதியிடம் நான் 9 லட்ச ரூபாய் கடன் வாங்கினேன் என்றாலும் அதிலிருந்து தப்பிப்பதற்காக தவறாக எதிர்வாதம் செய்து உண்மைக்கு புறம்பாக சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல. வாதிக்கு அவர் கோரிய பரிகாரம் கிடைக்கத்தக்கது என்றால் சரியல்ல.

Typed to my dictation and correction by me in open court read over to the witness and admitted by him as correct

Sd/- S.Selva Sundari
Principal District and Sessions Judge,
Tiruvallur.